individual co

ஆணையர் (வணிகவரிகள்)
17 NOV 2020
சென்னை-600 005

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – வணிகவரித்துறை – சென்னை (தெற்கு) கோட்டம் – திருமதி சி.தமிழரசி என்பவர் கருணையடிப்படையில் 12.06.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டது – உரிய சட்டப்பிரிவுகளை தளர்த்தி பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வணிகவரி மற்றும் பதிவுத் (அ2) துறை

அரசாணை (ப) எண்.200

நாள்: 04.11.2020
சார்வரி, ஐப்பசி–19,
திருவள்ளுவர் ஆண்டு, 2051
படிக்கப்பட்டன:

1. இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (தெற்கு) கோட்டம், செயல்முறைகள் எண்.2962/2017/அ6, நாள் 30.05.2019.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
3. முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையரின் கடித எண். ஓய்3/7251/2020, நாள் 19.03.2020.

*****

ஆணை:

வணிகவரித் துறையில், சென்னை (தெற்கு) கோட்டம், இணை ஆணையர் (வணிகவரி), செயலாக்கம்–1 ஆளுகைக்குட்பட்ட வணிகவரி அலுவலகம், புழல் தணிக்கை சாவடி அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த போது 14.12.2015 அன்று திரு சு.சித்தானந்தம் என்பவர் மரணமடைந்ததால் அவரது மனைவி திருமதி சி.விஜயலஷ்மி என்பவர் தமது மகள் திருமதி சி.தமிழரசி என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 22.03.2017 அன்று விண்ணப்பித்துள்ளார். திருமதி சி.தமிழரசி என்பவரின் பிறந்த தேதி 12,09.1982. அரசு ஊழியர் காலமானபோது தனியரின் வயது 33 ஆண்டுகள் ஆகும். இறந்த அரசு ஊழியரின் குடும்பம் வறிய நிலையில் உள்ளது; அவருடைய குடும்பத்தில் எவரும் அரசுப் பணியில் இல்லை என்பதால், கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி அளித்த விண்ணப்பத்தின் மீது விசாரணை மேற்கொண்டு ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு, முதலாவதாகப் படிக்கப்பட்ட இணை ஆணையர் (வணிகவரி), சென்னை (தெற்கு) கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி, திருமதி சி.தமிழரசி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டார். தனியர் கூடுதல் ஆணையர் (வணிகவரி), நுண்ணறிவு–I அலுவலகத்தில் 12.06.2019 முற்பகல் அன்று பணியேற்பு செய்துள்ளார். தனியரின் தற்காலிக பணி நியமனத்தை வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. திருமதி சி.தமிழரசி கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்வதற்கு தேவையான வயது மற்றும் குறைந்தபட்ச கல்வித்தகுதியான அதாவது இடைநிலைக்கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் (பத்தாம் வகுப்பு) தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும் அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 33 ஆண்டுகள் மற்றும் பணி நியமனம் செய்யப்படும்போது வயது 36 ஆண்டுகள் ஆகும்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, இறந்த அரசுப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்க வழிவகை